# கோவை அகழ்வைப்பகக் கையேடு



ஆசிரியர்

பெ. கௌதமபுத்திரன்

பதிப்பாசிரியர்

முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

# கோவை அகழ்வைப்பகக் கையேடு

பதிப்பாசிரியர்

**முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப,**

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்

**பெ. கௌதமபுத்திரன்**

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை -600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| TITLE | : | Kovai Museuem Guide |
| Editor | : | Principal Secretsry and Commissinor |
| Copy Right | : | Tamilnadu State Dept. of Archaeology |
| Subject | : | History & Archaeological Guide |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 229 |
| Year | : | 2010 |
| Type Point | : | 12 |
| No. of Pages | : | 50 |
| Paper Used | : | 80Gsm Maplitho |
| Printer | : | Chennai Printers,<br>Industrial co-opeartive society Ltd.,<br>6, Pycrofts Road,<br>Triplicane,<br>Chennai - 600 005 |
| Publisher | : | State Dept. of Archaeology,<br>Tamil Valarchi Valagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |
| Price | : | Rs. 37.00 |

# உள்ளே

பதிப்புரை

முன்னுரை

1. கோவை பெயர் காரணம் கோவை செவிவழி செய்திகள் 1

2. கோயமுத்தூர் அகழ்வைப்பகம் 6

3. அகழ்வைப்பக கல்வெட்டுகள் 19

4. கோவை அகழ்வைப்பகத்தில் செப்புத் திருமேனிகள் 21

5. அகழ்வைப்பகத்தில் நாணயங்கள் 22

6. கோவை அகழ்வைப்பகத்தில் உள்ள பிறபொருட்கள் 23

7. ஆலந்தூர் கல்வெட்டுகள் 29

8. ருத்திராபாளையம் கல்வெட்டுகள் 30

9. இலுப்பநத்தம் கல்வெட்டுகள் 32

10. நிழற்படங்கள் 34

## அட்டைப்பட விளக்கம்

முன்பக்கம் : சுடுமண் பொம்மை - பேரூர்

பின்பக்கம் : 1. சப்தமாத்திரிகா(ஏழு கன்னிகையர்) பேரூர்

2. அரச குடும்பத்தினர் - வைகுண்டம் நோக்கி செல்லும் புடைப்பு சிற்ப காட்சி - ஆனைமலை

முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை – 600 008

# பதிப்புரை

தமிழகத் தொல்லியல்துறை கல்வெட்டுகளைப் படியெடுத்து அச்சிட்டு வெளியிடுவது, மற்றும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்து அவ்வறிக்கைகளை நூலாக வெளியிடுவது, ஓலைச் சுவடிகள், செப்பேடுகள் போன்றவற்றை வாசித்து வெளியிடுவது போன்ற பணிகளுடன் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்களில் வரலாற்றுச் சின்னங்களை அகழ் வைப்பகங்கள் அமைத்து அப்பகுதியின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தவும், பாதுகாத்தல் போன்றவற்றையும் செய்து வருகின்றது. தமிழகத்தில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான தனித்தன்மைகள், மற்றும் வட்டார வழக்குகள் காணப்படுகின்றன, இவை அப்பகுதியின் இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

அகழ்வைப்பகம் என்பது அவை அமைந்துள்ள மாவட்டத்தின் சிறப்பியல்புகளை கூறுவதுடன் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு தொல்பொருட்கள் மற்றும் அப்பகுதியில் பூமிக்கடியில் கிடைக்கும் புதைப்பொருட்கள் போன்றவற்றை சேகரித்து வைக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டவையாகும். உதாரணமாக தமிழகத்தில் அதிக அளவில் தருமபுரி பகுதியில் நடுகற்கள் கிடைத்துள்ளதால் தருமபுரி அகழ்வைப்பகம் நடுகற்கள் அகழ்வைப்பகம் என்று அழைப்பது போல் கோவை மாவட்டத்தில் பண்டைய காலம் முதல் பழமையான தொழில்களும், நெசவு தொழில்கள் இருந்து வந்துள்ளது என்பதற்குச் சான்றாக பேரூர் அகழாய்வில் நெசவு சம்பந்தப்பட்ட சாயத் தொட்டியும்,

களிமண்ணால் செய்யப்பட்ட தக்களி (Spindle whorl) ஏராளமாக கிடைத்துள்ளது, மற்றும் இன்றளவும் தமிழகத்தில் கோவை மாவட்டம் ஏராளமான பல்வேறு வகையான தொழிற் கூடங்கள் நிறைந்த தொழிற் நகரமாக உள்ளது. மேற்கண்ட தொழிற்கருவிகளை இம்மாவட்டத்தில் சேகரித்து இவ்வகழ்வைப்பகத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் சங்க காலம் முதல் கிழக்கிந்திய கம்பெனி ஆங்கிலேயர்கள் காலம் வரை உள்ள வரலாற்றை சுருக்கமாகவும், தெளிவாகவும், கொங்குச் சோழர்கள், கொங்குப் பாண்டியர்கள், விசய நகர மன்னர்கள் வரலாறு தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நூலினை வெளிக் கொணர பகுதி II திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்து சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொங்கு நாட்டில் கள ஆய்வு, அகழாய்வு, கல்வெட்டு ஆய்வு செய்து பல்வேறு விவரங்களை சேகரித்து இந்நூலை எழுதியுள்ள தொல்லியல் அலுவலர் திரு பெ. கௌதமபுத்திரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூலின் பதிப்பு பணியினை மேற்கொண்ட இத்துறை அகழாய்வாளர் முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும், இந்நூலினை நல்ல முறையில் டிடிபி செய்து அட்டைப்படம் வடிவமைத்த திருமதி. தே. சத்தியவதி மற்றும் அச்சுப்பிழைத் திருத்திய திருமதி. கோ. செம்மலர் அவர்களுக்கும் பாராட்டுகள்.

இந்நூல் கொங்கு நாட்டு மக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

சென்னை-600 008 **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

22-02-2011

# முன்னுரை

தமிழக வரலாற்றில் சேர, சோழ, பாண்டிய நாடு என்று மூன்று பிரிவுகள் இருந்தாலும், கோவை, ஈரோடு, தருமபுரி, நாமக்கல், சேலம் மாவட்டங்கள் அடங்கிய பகுதியை கொங்குநாடு என்றும், சங்க இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் வழக்கமாக கூறுகின்றது. கொங்கு நாட்டில் குறிஞ்சியும் முல்லையும் அதிக அளவில் காணப்படுகின்றது. மேலும் கொங்கு நாட்டில் தொல்பழங்காலம் தொட்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை, கால்நடை வளர்ப்பு, மேட்டுநில விவசாயம், வேட்டையாடுதல் இப்பகுதியின் முக்கிய தொழிலாக இருந்துள்ளது.

கொங்கு நாட்டில் பண்டைய மக்கள் இனக்குழுக்களுக்களாக வாழ்ந்து கால்நடைகளை சொத்துக்களாகவே வளர்த்து வந்துள்ளனர். இந்த இனக்குழுக்களின் பிரிவுகளிடையே மற்றொரு குழுவினர் கால்நடைகளை கவர்ந்து செல்வதும், மற்றொரு குழு கவர்ந்து சென்ற கால்நடைகளை வீரம் செறிந்த மறவர்கள் மீட்டு வருவதும் பழக்கங்கள் நடை முறையில் இருந்துள்ளது. இந்த கால்நடை மீட்பு போர்களத்தில் வீர மரணம் எய்திய வீரர்களுக்கு நடுக் கற்கள் எடுக்கப்படும் நடைமுறை இருந்துள்ளது.

வட்டார அகழ்வைப்பகங்கள் அப்பகுதியின் தனித்தன்மையை அல்லது அப்பகுதியின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்ற நோக்கில் கொங்கு பகுதியின் பண்பாடு மற்றும் கலாச்சாரம் ஆகியவைப் பற்றி கொங்கு மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இத்துறையின் முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் திருமிகு முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப அவர்களின் அறிவுரையின் படி இந்த அகழ்வைப்பகம் பண்டைய தொழிற் கூடங்கள் அகழ்வைப்பகம் (Ancient +Industrial Art fact Musuem) என்று அழைக்கப்படுகிறது - காரணம் பண்டைய காலம் முதல் கோவையில் தொழிற்கூடங்கள் நிறைந்தும், பல்வேறு தொழிற்சாலைகள் உள்ளதால் இவ்வகழ் வைப்பகத்திற்கு பண்டைய தொழிற் கூடங்கள் அகழ்வைப்பகம் என்ற பெயரிடப்பட்டுள்ளது, இந்த அகழ்வைப்பகத்தில் அதிக அளவில் தொழிற்

கூட கருவிகளும், கல்வெட்டுகளும், நடுக்கற்களும், பண்டைய கால கல்மணிகளும், ஓலைச்சுவடிகளும் கற்சிற்பங்களும் ஏராளமாக சேகரித்து வைத்து பார்வையாளர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் வைக்கப்பட்டுள்ளது. மேலும் கோவைப் பகுதியில் ஜவுளி மற்றும் நெசவுத் தொழில்களும் தொடர்புடைய பண்டைய கருவிகள் இவ்வகழ்வைப்பகத்தில் சிறப்பாக வைக்கப்பட்டுள்ளது.

மேலும் நான், கொங்குப் பகுதியை சார்ந்தவன் என்ற ஆர்வத்தினால் இவ்வகழ்வைப்பகம் கையேட்டினை உருவாக்க ஆக்கமும் ஊக்கமும் தந்த முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் திருமிகு முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலினை உருவாக்க துணைநின்றவர்கள் எனது ஆசான் திருமிகு முனைவர் இரா. பூங்குன்றன் (உதவி இ.ஓ) அவர்களுக்கும், திருமதி முனைவர் சி. வசந்தி, பதிவு அலுவலர் அவர்களுக்கும், ஏனைய அலுவலக நண்பர்களுக்கும், இந்நூலினை அச்சுப்பணியினை மேற்கொண்ட அச்சுப்பிரிவினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பெ. கௌதமபுத்திரன்**

தொல்லியல் அலுவலர்

கோவை

# கோவை பெயர் காரணம்
# கோவை செவிவழி செய்திகள்

கோவை நகரின் பெயரை ஒரு பிரிவினர் ''கோயமுத்தூர்'' என்றும், மற்றொரு பிரிவினர் ''கோயம்புத்தூர்'' என்றும் ஆங்கிலத்தில் ''கோயம்பட்டூர்'' (**Coimbatore**) என்று மூன்று உச்சரிப்புகளில் அழைக்கின்றனர். சுருக்கமாக கோவை என்கின்றனர். இவ்வூரைப் பற்றிய செவிவழி செய்திகள் பல உள்ளன. உதாரணமாக ''கோயன்'' என்ற அரசன் இங்கே ஆண்டதாகவும், இவ்வூரிலுள்ள பெரிய குளத்தில் முத்து விளைந்ததாகவும் அதனால் கோயன் மற்றும் முத்து இணைத்து கோயன்முத்தூர் என்ற பெயர் மருவி ''கோயம்புத்தூர்'' என்று பெயர் வழக்கில் வந்ததாக செவிவழி செய்திகள் கூறுகின்றன. மற்றும் கோவையில் பழமையான கிராம தேவதை கோணியம்மன் என்ற கோயில் உள்ளது. இந்த கோணியம்மன் என்ற பெயர் மருவி திரிந்து கோயம்புத்தூர் பெயர் ஏற்பட்டதாகவும் மற்றுமொரு செவிவழி செய்தியும் உள்ளது. இன்று ஒரு செவிவழி செய்தி முதலாம் நூற்றாண்டு சிலப்பதிகார காலத்தில் ''கொங்கு இளங்கோசர்'' என்ற மன்னன் ஆண்டதாகவும், இந்த கோசர் என்ற சொல் திரிந்து மருவி ''கோசர்'' கோயம்புத்தூராக மாறியது என்றும் செய்திகள் கூறுகின்றது.

## சோழன் பூர்வ பட்டயம்

கோவையைப் பற்றிய கதைச் செய்தியை அறிய உதவும் தொல்லியல் சான்று ''சோழன் பூர்வ பட்டயம்'' ஆகும். இந்த பூர்வ பட்டயத்தில் கொங்கு நாடு ஒரு காலத்தில் அடர்ந்த மரங்கள் நிறைந்த வனமாகவும் இருந்துள்ளது. காரணம் மேற்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக கோவை இருக்கின்றது. இந்த அடர்ந்த வனப்பகுதியில் ''கோவன்'' என்ற இருளர் இனத்தலைவன் இருந்துள்ளான். இவன்

கோணியம்மன் என்ற இருளர் இனத்தலைவன் "கோவன்" வாழ்ந்த அம்மனை வணங்கிய இடமாதலால் இவ்வூர் "கோவன்பதி" எனப்பெயர் ஏற்பட்டதாகவும் பின்னர் இப்பெயர் மருவி கோயம்புத்தூர் என்றும் மலை இனம் இருளர் தலைவன் கோவன் பெயரே கோயம்புத்தூர் என்று பெயர் ஏற்பட்டதாகவும் பட்டயம் செய்தி கூறுகின்றது.

## கல்வெட்டுகளில் கோயம்புத்தூர்

கோவை மாவட்டத்தில் தோராயமாக 1500 கல்வெட்டுகள் வெவ்வேறு இடங்களில் உள்ளன. இருப்பினும் இரண்டு ஊர்களில் உள்ள கல்வெட்டுகளில் "கோவன்புத்தூர்" என்ற சொல் வருகிறது. அவை பேரூர், குமரிலிங்கன் ஊர்களின் கல்வெட்டுகளாகும்.

## பேரூர் பட்டீஸ்வரர் கோயில் கல்வெட்டு

கோவை வட்டம் பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள இரண்டு கல்வெட்டுகளில் "கோவன்புத்தூர்" என்ற சொல் வருகின்றது. முதலாவதாக கல்வெட்டு "கோனேரின்மை கொண்டான்" என்ற பட்டப்பெயர் கொண்ட பேரூர் பட்டீஸ்வரர் கோயில் கல்வெட்டு கொங்குச் சோழன் காலத்தியது ஆகும். (கி.பி. 1132 முதல் கி.பி.1206 வரை)

ஒரு நாட்டினுடைய அரசியல், சமூக பொருளாதார வரலாறுகளை எழுதுவதற்கு கல்வெட்டுகளே சிறந்த சான்றுகளாக உள்ளன. கோவை மாவட்டத்தில் கிடைக்கின்ற கல்வெட்டுகள் தமிழ், தமிழ்-பிராமி, வட்டெழுத்து. தமிழ் எழுத்து, கிரந்தம், கன்னடம் தெலுங்கு போன்ற எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது. இங்குள்ள கல்வெட்டுகளில் பல அரசர்கள், ஊர்த்தலைவர்களும் வழங்கிய ஆணைகளாக அளித்த செய்திகள் மக்கள் மொழியில் எழுதப்பெற்றுள்ளது. மற்றும் கல்வெட்டுகளில் நிதானம், காசு, கொடை, நீர், நிருவாகம், மாடுபிடிச்சண்டை, நடுக்கல், பலதரப்பட்ட மக்கள் பெயர், வாணிகம், வேளாண்மை, கைத்தொழில் போன்ற செய்திகள் கோவை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டுகளில் அறியப்படுகின்றது.

## கோவை மாவட்ட செப்பேடுகள்

கோவையில் கிடைத்துள்ள செப்புப் பட்டயங்களில் இருகூர் வரகோளன் (11-ஆம் நூற்றாண்டு) "வேட்டுவர் பூர்வ பட்டயம்" தொன்மையானது. இப்பட்டயம் கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இப்பட்டயத்தில் வேளாளர். வேட்டுவர் ஆகிய இரண்டு சமூகத்தினருடைய உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தை பற்றி குறிப்பிடுகின்றது.

## மதுக்கரை பட்டயம்

மதுக்கரையில் கிடைக்கப்பெற்ற பட்டயத்தில் கொங்கு வேளாளருக்கும். கொங்கு குசாலர்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை பற்றிய செய்திகள் கிடைக்கப் பெறுகின்றது.

## பொள்ளாச்சி பட்டயம்

இப்பட்டயத்தில் பொள்ளாச்சி கொங்கு வேளாளர் சமூக மக்களிடையே ஏற்பட்ட உடன்படிக்கைப் பற்றிய செய்திகளை நாம் அறிய முடிகிறது.

## இலக்கியச் சான்றுகள்

தமிழ் இலக்கிய மரபு கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே தொடக்க காலமாகும். சங்க இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையை காட்டும் கண்ணாடி என்று கூறலாம். கோவை மாவட்டத்தில் காணப்படும் இலக்கியங்கள், அரசியல்., வரலாறு சான்றுகளைக் காட்டிலும், சிறுதெய்வ வழிபாடு, சமயம் போன்றவைகளைப் பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளது.

## பிற்கால இலக்கியங்கள்

கி.பி. 15 அல்லது 16-ஆம் நூற்றாண்டில் கோவை மாவட்டத்தில் இலக்கியம் உருவானது இந்த இலக்கியச் செய்திகளில் பட்டிக்காரர். பாளையக்காரர் போன்றவர்களைப் பற்றியதாக உள்ளது. தலப்புராணங்கள், மண்டல சதங்களும் கிடைத்துள்ளது. உதாரணமாக

கொங்கு மண்டல சதகம், ஓதாலர் குறவஞ்சி, பேரூர் புராணம், திருமுருகன் பூண்டி புராணம், வேளாளர் புராணம், பஞ்சவர்ண காவியம், குருநில காவியம் போன்ற புராணங்களில் கோவையில் சமூக வரலாறு செய்திகள் குறிப்பிடுகின்றது.

## கோவை நாட்டார் பாட்டுக்கள்

கோவை மாவட்டத்தில் வாய்மொழி பாட்டுக்கள் மிகுதியாக காணப்படுகின்றது. குறிப்பாக "அண்ணன்மார் சுவாமி கதை" "கள்ளழகர் அம்மானை" போன்ற மக்கள் மொழிப் பாட்டுக்கள் வேளாளர் சமூகத்தைப் பற்றி அறியமுடிகிறது.

கோவை மாவட்ட வரலாற்றினை அறிந்து கொள்ள திரு. முத்துசாமி கோணார் எழுதிய "கொங்கு நாடு" என்ற நூல் பல சமூக வரலாறு செய்திகளையும், மற்றும் அதியமான்கள், மழவர்கள், ஓரிகள் மற்றும் பிற்கால பட்டயக்காரர். பாளையக்காரன் போன்றவர்களை பற்றியும் அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் துணை புரிகின்றது.

## ஆய்வு நூல்கள்

கோவை மாவட்டத்தைப் பற்றியும், கொங்கு நாட்டைப் பற்றியும் அறிந்து கொள்ள பல தொல்லியல் அறிஞர்கள் ஆய்வுக்கட்டுரைகள் பெரிதும் துணை நிற்கின்றன. அறிஞர்கள் உதாரணமாக பேராசிரியர் வி.மாணிக்கம் அவர்கள் "கொங்கு நாட்டு பொருளாதாரம்" என்ற ஆய்வுக் கட்டுரையும், பேராசிரியர் மா.கணேசன் அவர்கள் "கெங்கேழ் சிவலாயக் கட்டுரைகள்" என்ற ஆய்வுக் கட்டுரையும், பெரும்புலவர் கழந்தை அவர்களின் கொங்கு நாடு என்ற தலைப்பில் ஒரு நூலும் மற்றும் மயிலை சீனி வெங்கடசாமி நாட்டார் எழுதிய கொங்கு நாட்டு வரலாறு என்ற நுலம், இந்நூல் சங்க காலத்தில் கோவை மற்றும் கொங்கு நாட்டைப் பற்றி அறிந்துகொள்ள உதவும் ஆய்வுகளாகும்.

## சங்க காலம்

சங்க காலத்து பண்டைய நுல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து என்பவைகள் கொங்கு நாட்டின் பெயரை மாத்திரம் குறித்து அதன் மக்களை "கொங்கர்" என்ற பெயராலேயே குறிக்கப்படுகின்றது. கொங்கு நாட்டு மலையான கொல்லி மலையை குறிப்பிடுவதால் அக்காலத்தில் கொங்கு நாட்டு கழக்கெல்லையான கொல்லிமலையை அளவாக வைத்துள்ளனர். தகடூர் தலைவர்களான அதியமான் பெயரை பண்டைய காலத்தில் குறிப்பிடுவதால் கொங்கு நாட்லெ் தகடூர் தகடூகளும் உட்பட்டிருந்தது எனலாம். கொங்கு நாட்டை கொங்கு வேளீர் என்ற பெயர்கொண்ட குறுநில மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். குறுநில வேளீர் மன்னர்கள் ஒருவரோட ஒருவர் அடிக்கடி போர் செய்து கொண்டு இருந்துள்ளனர் நாட்டு மக்கள் காடுகளிடையே வாழ்ந்து வந்துள்ளனர். ஆகையால் அவர்கள் குறிஞ்சி நாட்டிற்குரிய தொழில்களையும், பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளனர்.

# கோயமுத்தூர் அகழ்வைப்பகம்

கோவை மாவட்டம் காடுகளும், மலைகளும் நிறைந்த மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் வரலாற்றுக்கு முந்தைய தொல்லியல் சான்றுகளான கற்கால கருவிகள் மிகுதியாக கிடைத்துள்ளது. பழைய கற்காலம், பெருங்கற்காலம் என மூன்று காலங்களைச் சார்ந்த கற்கருவிகளும். ஈமச்சின்னங்களும் கோவை மாவட்ட வரலாற்றின் காலத்தை நிர்ணயிப்பதற்கு பெரிதும் துணை புரிகின்றது.

வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் கோவை மாவட்டம் சேரர்களின் ஆட்சியின் கீழ் இருந்து உள்ளது. சேரர் மன்னர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் கோக்கண்ட வீரநாராயணன், கோக்கண்டன், ரவிகோதை ஆகியோர்கள் ஆவார்கள். இவர்கள் காலத்து கல்வெட்டுகளும் கோவை மாவட்டத்தில் கிடைக்கின்றது. சேரர்களுக்குப் பின் கர்நாடகத்தை ஆட்சி செய்து வந்த கங்கர்கள் கொங்கு நாட்டை கைப்பற்றி தங்கள் ஆளுகைக்கு கீழ் கொண்டு வந்துள்ளனர். கங்கவாடியைத் தலைநகராக கொண்டு "கொங்கனிவர்மன்" என்று மன்னனும், இவனுடைய வாரிசுகளும் ஆட்சி செய்தனர். இவர்கள் இராட்டிர கூடர்களின் வம்சவழியினர் ஆவார்கள். கங்க அரசனான "துர்வநீதன்" காலத்தில் பைசா மொழியில் இருந்த பெருங்கதை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது என்ற செய்தியும் உள்ளது.

கங்கர்களுக்கு பின் கோவை மாவட்டம் சோழர்களின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. சோழ மன்னன் ஆதித்தன் வேட்டுவ ராசாக்களை வென்று கொங்கு நாட்டை கைப்பற்றியதாக "கொங்கு தேச ராசாக்கள் சரிதம்" என்ற நுல் வழியாக அறியப்படுகிறது. முதலாம் ஆதித்தன் மகன் பராந்தகனின் காலத்து கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் கிடைக்கிறது. மாமன்னன் முதலாம் இராசராசன் காலத்தில் கங்கவாடியை சோழர்கள் கைப்பற்றியுள்ளனர். இதன் வெற்றியின் நினைவாக கர்நாடகம் கொள்ளேகாலுக்கு அருகில் "முடிகொண்ட சோழபுரம்" என்ற நகரை நிறுவியுள்ளான். தஞ்சை சோழர் பேரரசின் பிரதிநிதிகள் கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்துள்ளனர். இந்த பிரதிநிதிகள் "கொங்குச் சோழர்" என்று அழைக்கப்பட்டனர். இந்த கொங்குச் சோழர்கள் கொங்கு நாட்டை கி.பி. 1004 முதல் 1303 வரை ஆட்சி செய்துள்ளனர்.

கொங்குச் சோழர்களுக்கு பின் கொங்கு நாட்டை பாண்டியர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் "கொங்கு பாண்டியர்கள்" என்று அழைக்கப்பட்டனர். கொங்கு பாண்டியர்களுக்கு பின் ஒய்சானர்களும் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் கி.பி. 1345 வரை கொங்கு நாட்டை ஆட்சி செய்துள்ளனர். ஒய்சாளர்களுக்கு பின் கொங்கு நாடு கி.பி.1381-ல் விசயநகர மன்னர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. விசயநகரர்கள் கி.பி. 1667 வரை ஆட்சி செய்தனர். இவர்கள் தங்களுக்கு கீழ் பாளையக்காரர்களை பிரதிநிதிகளாக நியமித்து ஆட்சி செய்தனர். கொங்கு நாடு நாயக்கர்களின் கட்டுப்பாட்டிலும் இருந்துள்ளது. நாயக்கர்களின் ஆட்சிக்கு பின் கிழக்கிந்திய கம்பெனி ஆதிக்கம் பெற்று ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொங்கு நாடு இருந்துள்ளது.

இவ்வாறு வரலாற்றுக்கு முந்தைய கொங்கு நாட்டில் வாழ்ந்த மனிதன் விட்டுச்சென்ற கற்கால கருவிகளையும், வரலாற்றுக் காலத்தில் பல்வேறு அரச வம்சத்தினர் விட்டுச் சென்று தொல்லியல் சான்றுகளையும் **(Antiquties)** சேகரித்து கோயம்புத்தூர் அகழ்வைப்பகம் மக்கள் பார்வைக்கு ஏற்றவாறு வைக்கப்பட்டு அகழ்வைப்பமாக செயல்பட்டு வருகின்றது.

இவ்வகழ்வைப்பகத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால தொல்லியல் சான்றுகளின் காட்சிப் பொருட்கள், பழைய கற்கால காலத்தைச் சார்ந்த கற் கருவிகள், புதிய கற்கால கருவிகள், பெருங்கற்கால கருவிகள் என மூன்று வகையாக பாகுபடுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### பழைய கற்கால கருவிகள்

இப்பழைய கற்கால கருவிகள் **(Paleolithic Hand ware)** கரடுமுரடான கைக்கோடாரி வகையைச் சார்ந்தவையாகும். இவை கி.மு. 5000-ம் காலத்தைச் சார்ந்தவையாகும். இப்பழைய கற்கால கருவிகள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

### புதிய கற்கால கருவிகள்

புதிய கற்கால கருவிகள் கோவை மாவட்டத்தில் போளுவாம்பட்டி, வெள்ளருகம்பாளையம், ஆணைமலை போன்ற ஊர்களிலிருந்து

சேகரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு காட்சி பொருளாக வைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கற்கால கருவிகள் கி.மு. 3000-ம் காலத்தைச் சார்ந்தவையாகும்.

## பெருங்கற்காலம்

பெருங்கற்காலத்தைச் சார்ந்த கல்வட்டங்கள் கோவை மாவட்டத்தில் பெரும்பாலான ஊர்களில் காணப்படுகிறது. இப்பெருங்கற்காலம் கி.மு. 300-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவையாகும். இக்காலத்தில் வாழ்ந்த மக்கள் இறந்தவர்களை புதைக்கும் வழக்கம் கொண்டவர்கள். பாண்டவர்குழி என்ற அமைப்பையும் மற்றும் இன்னொரு வகையான ஈமப்பேழைகள் **(Sarcophaus)** பயன்படுத்தியுள்ளனர். இவ்வகையான தாழிகளில் உள்பகுதியில் சிறிய அளவிலான மட்பாண்டங்கள், இரும்பு, கற்கருவிகளையும் உள்ளே வைத்துப் புதைத்துள்ளனர். இந்த வகையான முதுமக்கள் தாழிகள் கோவை மாவட்டத்தில் காளிமங்கலம், இருகூர், போளுவாம்பாடி மற்றும் திப்பம்பட்டி போன்ற ஊர்களில் வெவ்வேறு அளவுகளில் சேகரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மற்றொரு சிறப்பு அம்சமாக மூன்று கால்களையுடைய ஈமக்குடுவையும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## கோவை அகழ்வைப்பகத்தில் மட்பாண்டங்கள்

இவ்வகழ்வைப்பகத்தில் வெவ்வேறு வகையான வெவ்வேறு காலத்தைச் சார்ந்த மட்கலன்கள் சேகரித்து மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. கிமு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கழுத்துடன் கூடிய சின்னம் **(Necked Bowl)** கருப்பு சிவப்பு **(Black and Red Ware)** வகையை சார்ந்தவையாகும். அதே வகையைச் சார்ந்த மண்குடுவை மூடி **(Lid)** மூக்குடன் கூடிய சின்னம் **(Bowl)** மண்பானைத் தாங்கி **(Ring with Stand)** மூன்று கால்களை உடைய ஜாடி**(Jar)** போன்ற மட்கலன்கள் காண்போறை கவரும் வண்ணம் உள்ளது. மற்றொரு சிறப்பு அம்சமாக ஆந்திர மட்பாண்ட சின்னம் **(Bowl with Russet coated)** உள்ளது. இந்த சின்னத்தின் மேல் அலை போன்ற கோடுகளும் உள்ளது. மற்றும் மிகவும் பழைமையான குழிபணியாரச் சட்டியும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு மட்கலன்கள் (Amphora Jar)

கோவை அகழ்வைப்பகத்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த ரோமானிய நாட்டவர் பயன்படுத்திய மதுக்குடுவை ஒன்றும் மக்கள் பார்வைக்கு ஏற்றவாறு வைக்கப்பட்டுள்ளது.

## அகழ்வைப்பகத்தில் பொம்மைகள் (Tarracotta)

கோவை அகழ்வைப்பகத்தில் பல்வேறு வகையான சுடுமண் பொம்மைகள் உள்ளது. குறிப்பாக விநாயகர் சுடுமண் பொம்மை மற்றும் நூல் நூற்கும் தக்களி **(Spindle)** சுடுமண் பொம்மையாக உள்ளது. சுடுமண் சதுரங்க காய்கள் **(Chees)**வெவ்வேறு வகையான காதணிகள் **(Earbpes)** பலவகையான வெவ்வேறு வடிவங்களில் சுடுமண் விளக்குகள் **(Lamps)** மற்றும் சிறியவர்கள் விளையாடும் சில்லு **(Hip-Hop)** புகைப்பான் **(Smoking Pipes)** வெவ்வேறு வகையான சுடுமண் மனித உருவங்களும் பொம்மைகளும் மக்கள் பார்வைக்கு ஏற்றவாறு சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

## கல்லால் செய்யப்பட்ட காட்சிப் பொருட்கள் (Stone Antiquties)

கோவை மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட கல்லால் செய்யப்பட்ட பல்வகையான பொருட்கள் இவ்வகழ்வைப்பகத்தில் உள்ளது. கற்கால கருவிகளை கூர்மையாக்கும் "சானைக்கல்" கல் உருண்டை**(weight)** பளுதூக்கும் நோக்கத்திற்கு பயன்படுத்தி இருக்கலாம். மற்றும் கல்சுத்தி **(Hammer)** கல்சக்கரம் **(Wheel)** மற்றும் பழமையான அம்மிக்கல்**(Quern)** போன்ற கல்லில் செய்யப்பட்ட தொல்லியல் சான்று மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## வரலாற்றுக்கால செங்கற்கள்

கோவை மாவட்டத்தில் உள்ள பழமையான கோட்டை மற்றும் கொத்தளங்களிலிருந்தும் வெவ்வேறு அளவுடைய பெரியபெரிய செங்கற்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த செங்கற்கள் தற்கால செங்கற்களை காட்டிலும் முற்றிலும் மாறுபட்டவையாகும். இந்த

வரலாற்றுக்கால செங்கற்கள் அளவு நீளம் - அகலம் - பருமன் 24 ½ செ.மீ, 16 செ.மீ, 56 செ.மீ. ஆகும். இந்த செங்கற்கள் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்துள்ளது.

**மணிகள்(Beads)**

இவ்வகழ்வைப்பகத்தில் ஒரு காட்சிப் பெட்டி முழுவதும் பலவகையான மணிகள் **(Beads)**பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த மணிகள் அகழாய்வு, செய்யப்பட்ட ஊர்களாகிய பேரூர், போளுவாம்பட்டி, வெள்ளலூர், கொடுமணல் போன்ற ஊர்களில் சேகரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த மணிகளில் குறிப்பிடத் தகுந்தவை கார்னீலியன் மணிகள், சூதுவளை பவளங்கள், பவளமணிகள் போன்றவைகளாகும். இந்த மணிகள் அலங்கார ஆபரணங்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த கல்மணிகள் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும் மற்றும் கல்மணிகளில் பச்சை நிறம், நீலநிறம், சிவப்பு நிறம் போன்ற வண்ணங்களில் உள்ளது.

**வளையல்கள்**

இவ்வகழ்வைப்பகத்தில் முக்கிய தொல்லியல் சான்றுகளான சங்கு வளையல்கள் **(Conch Bangles)**மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த வளையல்கள் பல்வேறு ஊர்களில் நடைபெற்ற அகழாய்வுகளிலிருந்து சேகரிக்கப் பட்டுள்ளது. இந்த வளையல்கள் கலைநயத்துடன் காட்சியளிக்கின்றது. செம்பு வளையல்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சங்கு வளையல் முழமையாகவும் உடைந்த நிலையிலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**கோவை அகழ்வைப்பக கற்சிற்பங்கள்(Sculpture)**

கோவை மாவட்டத்தில் பல்வேறு ஊர்களில் கவனிப்பாறின்றி கிடைக்கின்ற கற்சிற்பங்களை சேகரித்து சுமார் 50-க்கும் மேற்பட்ட சிற்பங்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த கற்சிற்பங்கள் வெவ்வேறு காலத்தையும் இடத்தையும் சார்ந்தவையாகும். இந்த

கற்சிற்பங்களை நடுகற்கள், சைவம், வைணவம், புத்தமதம், ஜைனமதம் என பாகுபடுத்தி முறையாக வைத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

## நடுகற்கள்(Hero Stones)

கோவை மாவட்டத்தில் கிடைக்கப் பெற்ற நடுகற்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

### கொழுமம் நடுகள்

இந்த நடுகல்லில் மனிதன் நின்ற நிலையில் புலியுடன் சண்டை செய்யும் காட்சி கற்சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. இந்த நடுகல் கி.பி. 12-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### நரசிபுரம் நடுகல்

இந்த நடுகல்லில் வீரனின் தலைமுடி சாய்ந்த நிலையில் கையில் கத்தியும், கேடயமும் உள்ளது. வீரனின் பின்புறம் நாயும் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இந்த நடுகல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### வெள்ளலூர் நடுகல்

இந்த நடுகல்லில் வீரன் ஒருவன் கையில் வாளை ஏந்தியவாறு காட்சியளிக்கின்றான். இந்த கற்சிற்பம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### மூப்பேரி பாளையம் புலிக்குத்திக்கல்

மூப்பேரி பாளையம் புலிக்குத்திக்கல், மிகப்பெரிய கற்சிற்பமாக உள்ளது. இந்த சிற்பத்தில் ஒரு வீரன் புலியை வாளால் குத்துவது போன்றும், தலையில் தலைப்பாகை அணிந்தும். மார்பில்; ஆபரணங்கள் அணிந்தும் காட்சியளிக்கின்றான். இந்த நடுகல்லின் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### சப்தமாதர்கள் கற்சிற்பங்கள்

இவ்வகழ்வைப்பகத்தின் சிறப்பு அம்சமாக சப்தமாதர்கள் சிலை ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் உடுமலை வட்டம்,

கரையூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. சப்தமாதர்களாகிய பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டா போன்ற பெண் தெய்வங்கள் அமர்ந்த நிலையில் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது. இந்த சிற்பம் கி.பி.10-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**சைவமதம் சிற்பங்கள்**

கோவை அகழ்வைப்பகத்தில் மக்கள் பார்வைக்கு வசதியாக சைவமத சிற்பங்கள் தனியாக வரிசைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த சைவமத கற்சிற்பங்களில் குறிப்பிடத் தகுந்த சில சிற்பங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

## நந்தி சிற்பம்

**பெருமாநல்லூர் நந்தி சிற்பம்**

பெருமாநல்லூர் நந்தி சிற்பம் மிகவும் நேர்த்தியாக உள்ளது. இந்த நந்தி கற்சிற்பம் சற்று அளவில் பெரியதாக உள்ளது. இந்த நந்தி சிற்பம் கி.பி. 18-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**கரையூர் நந்தி சிற்பம்**

இந்த நந்தி கற்சிற்பம் படுத்த நிலையில் உள்ளது. தாமரை மொட்டு போன்று **(Budding horns)** கொம்புகள், கால்கள், தசை சுருக்கம் இவைகள் அனைத்தும் கலைநுணுக்கத்துடன் காட்சியளிக்கின்றன. இந்த நந்தி சிற்பம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**போளுவாம்பட்டி நந்தி**

இவ்வூரிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ள நந்தி படுத்துக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது. கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. கி.பி. 13 அல்லது 14-ஆம் நூற்றாண்டை சார்ந்தவையாகும்.

**ஆவுடையார் லிங்கம்**

இவ்வகழ்வைப்பகத்தில் வெவ்வேறு அளவு, காலத்தைச் சார்ந்த லிங்க சிற்பங்கள் ஆவுடையாருடன் உள்ளது. இந்த கற்சிற்பங்களை

வரிசைப்படுத்தி மக்கள் பார்வைக்கு ஏற்றபடி காட்சி பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

### கரையூர் லிங்கம்

இந்த லிங்கம் மிகப்பெரிய சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. இந்த கற்சிற்பம் கி.பி.12-ஆம் நூற்றாண்டை சார்ந்தவையாகும்.

### கோவில் பாளையம் லிங்கம்

கோவை மாவட்டம் கோவில்பாளையத்திலிருந்து சிறிய அளவிலான லிங்கம் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த லிங்கம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### குள்ளி செட்டிபாளையம் சிவலிங்கம்

இந்த லிங்கத்தில் ஆவுடையார் வெள்ளைக் கல்லில் அமைந்துள்ளது. இச்சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### சண்டிகேஸ்வரர்

இச்சிற்பம் கரையூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. அமர்ந்த நிலையில் இரண்டு கரங்களுடன் காட்சியளிக்கின்றார். இரண்டு கரங்களில் ஒன்றில் பாசுரம், மற்றொரு கரம் தொடை மேலும் உள்ளது. இச்சிற்பம் கி.பி.11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### லகுலிசர் சிற்பம்

இச்சிற்பம் கோவை பேரூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. லகுலிசர் கையில் தண்டுடன் அமர்ந்த நிலையில் உள்ளார். இச்சிற்பம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### பிராமி சிற்பம்

பிராமி அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றது. சற்று பின்னப்பட்ட நிலையிலும் உள்ளது. பேரூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**நவகண்ட சிற்பம்**

இச்சிற்பம் கோவை மாவட்டம் அன்னூரிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு வீரன் கழுத்தில் கத்தியுடன் கரங்கள் இரண்டும் வணங்கியபடி நின்ற நிலையில் கற்சிலையாக செதுக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும்.

**காளி சிற்பம்**

இச்சிற்பம் கோவை மாவட்டம் பழங்கரையிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த காளிச் சிற்பம் எட்டு கைகளையுடைய மிக அகோரமாக காட்சியளிக்கின்றார். இச்சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**ஆறுமுகம்**

இச்சிற்பம் கோவை மாவட்டம் உடுமலை வட்டம் கடத்தூர் கிராமத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. இச்சிற்பம் ஆறுமுகங்களையும் தலையில் கரண்ட மகுடமும். வளர்ந்த நிலையில் காதுகள், 12 கைகள், முருகனின் கீழ் மயில் நின்ற நிலையில் உள்ளது. இச்சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**சூரியன்**

இச்சிற்பம் கடத்தூரிலிருந்து கொண்டு வரப்பட்டது. இச்சிற்பம் கருங்கல்லில் செதுக்கப்பட்டு உள்ளது. இரண்டு கைகளிலும் நீண்ட மொட்டுடன் கூடிய மலர் உள்ளது. காதில் மகர குண்டலமும் உள்ளது. சற்று பின்னப்பட்ட நிலையில் உள்ளது. இது கி.பி.12-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**சாமுண்டா சிற்பம்**

கோவை மாவட்டம் பேரூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சிற்பம் பின்னப்பட்ட நிலையில் உள்ளது. இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**மயில் சிற்பம்**

இச்சிற்பம் கோவை கோவில்பாளையத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. இச்சிற்பம் மிக சிறிய உருவமாக கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இந்த மயில் சிற்பம் கி.பி. 18-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**அய்யனார் சிற்பம்**

இச்சிற்பம் கோவில்பாளையத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. அய்யனார் சிற்பம் வெள்ளைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. அய்யனார் அமர்ந்த நிலையில் உள்ளார். இரு கைகள் உள்ளது. வலது கையில் செண்டு உள்ளது. இச்சிற்பம் கி.பி. 15-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**தட்சிணாமூர்த்தி**

இச்சிற்பம் வெள்ளலூரிலிருந்து கொண்டு வரப்பட்டது. இச்சிற்பம் பின்னப்பட்ட நிலையில் உள்ளது. இச்சிற்பம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**யாளி சிற்பம்**

இச்சிற்பம் கொழுமத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சிற்ப வரிசையில் மூன்று யாளிகள் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**வரிகள் (Yali Varigal)**

இந்த வரிகளில் **(Decarative frize)** நடராசர், வராகி, துர்க்கை, முகிசி போன்ற சிறிய, சிறிய சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.பி.16 அல்லது 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**போதிகை (Bhodigai carbel)**

இச்சிற்பம் வேலைப்பாடுகள் அமைந்து காணப்படுகின்றது. இச்சிற்பம் கோவை அவிநாசி வட்டம் கருவலூரிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்த போதிகை விசயநகர காலத்தைச் சார்ந்தவையாகும்.

**அம்மன்**

இச்சிற்பம் கரையூரிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இந்த அம்மன் சிற்பமானது நான்கு கரங்களுடன் காட்சியளிக்கின்றாள். இச்சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

## கௌமாரி

இச்சிற்பம் கரையூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சிற்பம் அமர்ந்த நிலையில் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறது. கைகளில் வஜ்ஜிரம், அக்கமாலை, சூலம் ஏந்தியுள்ளது. இச்சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

## முருகன்

இச்சிற்பம் கொழுமத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. முருகன் நின்ற நிலையில் நான்கு கரங்களுடன், வஜ்ஜிரம், சக்கி முதலியவற்றை கையில் ஏந்தியவாறு உள்ளது. இச்சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

## பலிபீடம்

இச்சிற்பம் கோவை மாவட்டம் கோவில்பாளையத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சிற்பம் மிக நேர்த்தியாக மிகச்சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

## விஷ்ணு சிற்பம்

இச்சிற்பம் வெள்ளலூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. விஷ்ணு நின்றநிலையில் சங்கு சக்கரத்துடன் காட்சியளிக்கின்றார். இச்சிற்பம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருக்கலாம்.

## ஸ்ரீநிவாச வரதராசப் பெருமாள்

இச்சிற்பம் கோவை மாவட்டம், சுண்டபாளையத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. ஸ்ரீனிவாசப் பெருமாள் நின்ற நிலையிலும் கரண்டமகுடமும், பத்திர குண்டலம், நான்கு கைகளுடன், சங்கு, சக்கரம் அபய , வராக முத்திரையுடனும் காட்சியளிக்கின்றார். இச்சிற்பம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

## ஸ்ரீதேவி

இச்சிற்பம் சுண்டப்பாளையத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடம், மார்பில் ஆபரணங்களும், காதில் பத்திர

குண்டலமும், வலது கையில் தாமரை மொட்டுடன், இடது கைதொங்கிய நிலையிலும் காட்சியளிக்கின்றார். இச்சிற்பம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**பூதேவி**

இச்சிற்பம் சுண்டப்பாளையத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. பூதேவி கரண்ட மகுடம், மார்பில் ஆபரண, காதில் பத்திரகுண்டலம், இடது கையில் அல்லி மொட்டும், வலது கை தொங்கியவாறும் காட்சியளிக்கின்றார். இச்சிற்பம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**வைஷ்ணவி சிற்பம்**

இச்சிற்பம் கடத்தூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. சப்தமாதர்களில் இந்த வைஷ்ணவியும் ஒருத்தர் ஆவார். இந்த சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**முனிவர் சிற்பம்**

இச்சிற்பம் உழலைக் கோயிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. முனிவர் அமர்ந்த நிலையில் சிறிய அளவில் உள்ளார். இச்சிற்பம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**வெள்ளலூர் முனிவர் சிற்பம்**

இச்சிற்பமும் சிறிய உருவில் உள்ளார். முனிவர் அமர்ந்த நிலையில் உள்ளார். இச்சிற்பம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**முருகன் சிற்பம்**

இச்சிற்பம் கொழுமத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் கூடுமத்தியில் முருகன் நின்ற நிலையில் உள்ளார். இச்சிற்பம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**பார்சுவநாதர் சிற்பம்**

இச்சிற்பம் கோவை மாவட்டம் பொங்கலூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. பார்சுவநாதர் தியான நிலையில் உள்ளார். இருபுறமும், சாமரம் வீசுபவர்கள் **(Chaveri bearers)** உள்ளனர். பார்சுவநாதர்

தலையின் மேல் நாகம் படம் எடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த பார்சுவநாதர் சிற்பம் கி.பி. 9 அல்லது 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**மகாவீரர் சிற்பம்**

இச்சிற்பம் ஆலத்தூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. மகாவீரர் அரியணையில் அமர்ந்த நிலையில் உள்ளார். இதன் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

# அகழ்வைப்பக கல்வெட்டுகள்

## இலுப்பநத்தம் கல்வெட்டு

கோவை மாவட்டம் இலுப்பநத்தத்திலிருந்து ஒரு கல்வெட்டு சேகரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு செய்தியானது ஒய்சால அரசன் வீரவல்லாளன் ஜைனமத கோயிலுக்கு அளித்த கொடையைப் பற்றி குறிப்பிடுகின்றது.

## புங்கம்பள்ளி கல்வெட்டு

இக்கல்வெட்டு கி.பி. 16–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் "மகாமண்டலேசுவரன்" எனத் தொடங்கும் செய்தியுள்ளது.

## வெள்ளலூர் கல்வெட்டு

இவ்வூரிருலிருந்து இரண்டு கல்வெட்டுகள் சேகரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டுகள் பின்னப்பட்ட நிலையில் உள்ளது. இந்த கல்வெட்டுகள் கி.பி. 9–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

## ஆலத்தூர் கல்வெட்டு

கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், ஆலத்தூரிலிருந்து இரண்டு கல்வெட்டுகள் கொண்டு வரப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## ருத்திராபாளையம் கல்வெட்டு

கோவை மாவட்டம், உடுமலை வட்டம். ருத்திரா பாளையத்திலிருந்து கல்வெட்டு சேகரிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 13–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இக்கல்வெட்டு கொங்கு சோழர் விக்கிரம சோழன் இடங்கையர்க்கு வழங்கிய கொடையைப் பற்றி குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டில் கற்சிற்பங்களாக கொற்றவை, யாளி, குத்து விளக்கு, அன்னம் கலப்பை, கேடயம் முதலிய மங்கலச்

சின்னங்கள் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது. செதுக்கப்பட்டுள்ளது. இப்பலகை கல்லில் இரண்டு பக்கமும் கல்வெட்டுகள் உள்ளது.

### ஏல்காம் வலசு கல்வெட்டு

இக்கல்வெட்டு தாராபுரம் வட்டத்தில் ஏல்காம் வலசு என்ற கிராமத்திலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இக்கல்வெட்டு வணிகர் கல்வெட்டாகும்.

### ஆனைமலை கல்வெட்டு

இக்கல்வெட்டு பொள்ளாச்சி வட்டம் ஆனைமலை என்ற ஊரிலிருந்து கொண்டு வரப்பட்டு உள்ளது. இக்கல்வெட்டு வீரநாராயணன் காலத்து கல்வெட்டாகும். கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

# கோவை அகழ்வைப்பகத்தில் செப்புத் திருமேனிகள்

### தேவி செப்புத் திருமேனி

இந்த தேவி செப்புத் திருமேனி பேரூரிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்த அம்மன் பீடம் உடைந்துள்ளது. இதன் நீளம் 7.5 செ.மீ. அகலம் 3 செ.மீ. இந்த செப்புச்சிற்பம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### காளை

இந்த காளை செப்புத் திருமேனி கி.பி. 15 அல்லது 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இந்த செப்புத் திருமேனி காண்போரைக் கவரும் வண்ணம் உள்ளது.

### சூலம்

கோவை மாவட்டம் ஆனைமலையிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இந்த சூலம் 13 செ.மீ. நீளமுடையது. இச்சூலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### பாலகிருஷ்ணர்

இந்த செப்புத் திருமேனி கோவை மாவட்டம், போளுவாம் பட்டியிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. பாலகிருஷ்ணன் தவழ்ந்த நிலையில் உள்ளார். இந்த செப்புத் திருமேனியின் காலம் கி.பி. 9 அல்லது 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### காளி

காளி செப்புத் திருமேனியாக உள்ளாள். வட்டமான பீடத்தின் மீது நின்ற நிலையில் உள்ளது. நான்கு கைகள் உள்ளது. மேலிரு கைகளில் உடுக்கை, புரசம், கீழிரு கையில் திரிசூலம், கபாலம் ஏந்திய நிலையிலும், தலையில் கரண்டமகுடம், மகுடத்தைச் சுற்றி நெருப்புச் சுவாலை, காதில் பத்திரக்குண்டலம் மார்புக் கச்சை, மார்புக்கு நடுவில் முப்பூரி நூல், இடையிலிருந்து கணுக்கால் வரை ஆடை அலங்காரத்துடன் காட்சியளிக்கின்றாள்.

# அகழ்வைப்பகத்தில் நாணயங்கள்

கோவை அகழ்வைப்பகத்தில் சங்ககாலத்து காசு முதல் கிழக்கிந்திய பிரிட்டிஷ் கம்பெனி காலம் வரை உள்ள காசுகள் சேகரிக்கப்பட்டு பார்வைக்க வைக்கப்பட்டுள்ளது.

1. சங்க காலத்து பாண்டியர் காசு
2. சேரமான் காசு
3. இடைக்கால பாண்டியர் காசு
4. தஞ்சை நாயக்கர் காசு
5. மதுரை நாயக்கர் காசு
6. சாதவாகனர் காசு
7. யாதவர் காசு
8. திப்புசுல்தான் காசு
9. இராசராசன் காசு
10. இராட்டிரகூடர்
11. தஞ்சை மராட்டியர் பித்தளை காசு
12. டச்சுக்காரர்கள் காசு
13. மொகலாயர் காசு
14. சேதுபதி காசு
15. ஆங்கிலேயர் காசு
16. சந்திரபாண்டியன் காசு
17. மைசூர் மன்னர்கள் காசு
18. நீள் சதுரக் காசு
19. முத்திரைக் காசு

போன்ற காசுகள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

# கோவை அகழ்வைப்பகத்தில் உள்ள பிற பொருட்கள்

### நாதஸ்வரம் பழுது நீக்கும் கருவி

இக்கருவி யானை தந்தத்தால் செய்யப்பட்டுள்ளது. இக்கருவி ஊசிப் போன்ற அமைப்பில் உள்ளது. நாதஸ்வர இசைக் கலைஞர்கள் நாதஸ்வரத்தில் ஏற்படும் காற்றுத் தடையை நீக்கப் பயன்படுத்தப்படும் சிறிய கருவி. இக்கருவியின் முனை உடைந்துள்ளது. இக்கருவி மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இக்கருவி கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### இரும்பு வாள்

இக்கருவி கோவை டவுன்ஹால் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இக்கருவி 1½அடி நீளமுள்ளது. இக்கருவி கி.பி. 18-நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### கிளி [சுடுமண் உருவம்]

கூர்மையான மூக்குடனும், இக்கிளி சுடுமண் பொம்மை காண்போர் கண்களையும், பள்ளி மாணவர்களையும், கவரும் வண்ணம் உள்ளது. இந்த சுடுமண் கிளி பொம்மை கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

### யக்ஸன் பொம்மை

இவ்வகழ்வைப்பகத்தில் யக்ஸன் சுடுமண் உருவம் உள்ளது. மார்பில் ஆபரணங்களும், காதில் குண்டலங்களும் உள்ளது. இடுப்பில் அரைஞான் கயிறும் உள்ளது. இந்த சுடுமண் உருவம் சற்று சேதம் அடைந்துள்ளது.

### புத்தர் உருவம்

சுடுமண் பொம்மை புத்தர் உருவத்தின் மூக்கு பகுதி சேதமடைந்துள்ளது. இந்த புத்தர் சுடுமண் உருவம் முழுமையாக இல்லை.

**பெண் தெய்வம்**

இந்த பெண் உருவம் மாவுக்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. காதில் பத்திர குண்டலங்களும், மார்பில் ஆபரணங்களும் அழகுற செய்யப்பட்டுள்ளது.

**தேவதை**

இந்த பெண் தேவதை உருவம் மாவுக் கல்லில் செய்யப்பட்டுள்ளது. நீண்ட தொங்கிய காதுகள், நீண்ட கூந்தல், மார்பு, கழுத்தில் ஆபரணங்கள் அழகுற செய்யப்பட்டுள்ளது.

**கலைமான் கொம்பு**

இக்கலைமானின் கொம்பு மிகவும் பழமையானது. இது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளது.

**பிராமி எழுத்து பிரிவு**

கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமி எழுத்துக்கள் பொறித்த மட்கலன்கள் (கருப்பு, சிவப்பு, பானை) தட்டு, சின்னம், ஓடுகள் போன்றவைகளும் இவ்வகழ்வைப்பகத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் தமிழ் எழுத்துகள் வளர்ச்சி விபரங்கள்**

கோவை அகழ்வைப்பகத்தில் பள்ளி மாணவர்களும், தொல்லியல் அறிஞர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி என்ற விபரப் பலகை வைக்கப்பட்டுள்ளது. இப்பலகையில் தமிழ் பிராமி எழுத்து முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை உள்ள எழுத்துகள் எப்படி உருவம் **(Stroke)** மாறி வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை மிகத் தெளிவாக எழுத்துகள் வரையப்பட்டு "தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி" விவரப்பலகை வைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் வட்டெழுத்துகளின் வளர்ச்சி**

தமிழ்நாட்டு வரலாற்றில் குறிப்பாக பிற்கால சோழர் முதல் பாண்டியர்கள், கொங்கு சோழர்கள், ஹொய்சாளர்கள் கல்வெட்டில் வட்டெழுத்து முறையை பயன்படுத்தியுள்ளனர். இந்த வட்டெழுத்து

முறையை, பள்ளி, கல்லூரி, தொல்லியல் அறிஞர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் வட்டெழுத்துகளின் வளர்ச்சி பற்றியும், இந்த வட்டெழுத்துகள் கல்லில் எப்படி வெட்டப்பட்டுள்ளது என்பதை உதாரணத்துடன் விவரபலகை இவ்வகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**ஓலைச்சுவடிகள்**

பண்டைய மக்களின் வரலாற்றை அறிந்து கொள்ள ஓலைச்சுவடியும் ஒரு தொல்லியல் சான்றாகும். எனவே ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பட்டு, காட்சிப் பெட்டியில் ஓலைச்சுவடிகள் வைக்கப்பட்டுள்ளது. ஆதிபாரதம், சாஸ்திரிக் கோர்வை என்ற ஓலைச் சுவடியும் மற்றும் ஔவையார் குறள், மூதுரை, நல்வழி, திருவள்ளுவர் குறள், நாலடியார், ஞானக்கும்பு, அகப்பை சித்தர் பாடல் போன்ற ஓலைச்சுவடிகள் உள்ளது. இந்த ஓலைச்சுவடி எப்படி எழுதுவது, எப்படி படிப்பது. ஓலைச்சுவடியின் பயன் போன்ற விவரப்பட்டிகளும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**கல்மாறிகள் (Fossiles)**

வரலாற்றுக் காலத்தின் முன் வாழ்ந்த மான்களின் கொம்புகள் கல்லாக மாறியது பற்றியும் இரண்டு கல்மாறிகள் (மான் கொம்புகள்) மக்ள் பார்வைக்கு காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது.

**கோவை மாவட்டத்தில் தொல்லியல் தொடர்புடைய இடங்களின் பட்டியல்கள்**

கோவை மாவட்டத்தில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கோட்டைகள், சமணர்களின் இருப்பிடம், பெருங்கற்கால இருப்பிடங்கள், கொங்கு நாட்டு எல்லைகள், கொங்கு நாட்டில் அகழாய்வு நடைபெற்ற இடங்கள், கொங்கு நாட்டு பெருவழிகள், கொங்கு நாட்டு ஆறுகள், கொங்கு நாட்டில் நடுகற்கள் காணப்படும் ஊர்கள், கொங்கு சோழர்களின் வம்ச வழியினரின் பெயர் பட்டியல் போன்றவைகளை தனித்தனி விவரப் பலகையும் வைக்கப்பட்டுள்ளது.

**கொங்கு நாட்டில் சமணத்திருத்தலங்கள்**

1. விஜயமங்கலம்
2. சர்க்கார் சாமக்குளம்
3. செங்கம்பள்ளி
4. ஆவல்பூந்துறை
5. திருமூர்த்திமலை
6. அழியாறு
7. பொங்கலூர்
8. அரச்சலூர்
9. தாராபுரம்
10. வெள்ளோடு
11. சீனப்புரம்

போன்ற ஊர்களை வரைபடத்தில் குறிப்பிட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**கொங்கு நாட்டு எல்லைகள்**

கோவை பள்ளி மாணவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் கொங்கு நாட்டு எல்லைகள் விபரத்தினை விவரப்பலகையில் குறிப்பிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

*வடக்கு பெரும் பாலை வைகாவூர் தெற்க்கு*
*குடக்கு பொருப்பு, வெள்ளிக்குன்று கிடக்கும்*
*களித்தண்டலையளமேவு காவிரி சூழ்நாட்டுக்*
*குளித்தண்டளையளவு கொங்கு*

*வடக்கெல்லை பெரும்பாலை*
*தெற்கெல்லை பழனி*
*மேற்க்கெல்லை வெள்ளியங்கிரி*
*கிழக்கெல்லை குளித்தலை*

போன்றவை கொங்கு நாட்டு எல்லைகள் ஆகும்.

## கொங்கு சோழர்களின் பட்டியல்

கோவை மாவட்டத்தில் சோழர்களின் பிரதிநிதியாக கொங்குச் சோழர் ஆட்சி செய்து உள்ளனர். கொங்குச் சோழர்களின் வம்சாவழி மன்னர்களின் பட்டியலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

1. வீரசோழ கலிமூர்க்கன்
2. கலிமுர்க்க விக்ரமசோழன்
3. அபிமான சோழ ராஜாதிராஜன்
4. இராசாதிராச உத்தமசோழன்
5. இராசாதிராச வீரசோழன்
6. உத்தமசோழன் வீரநாராயணன்
7. குலோத்துங்கன்
8 வீரசோழன்
9. வீரராஜேந்திரன்
10. விக்கிரமசோழன்
11. பரகேசரி விக்கிரமசோழன்

## கோவை அகழ்வைப்பகம் பிற செயல்பாடுகள்

கோவை பள்ளி, கல்லூரி, தொல்லியல் ஆர்வலர்கள் அகழ்வைப்பகத்திற்கு பார்வையிட வரும்போது கோவை அகழ்வைப்பகத்திலுள்ள தொல்லியல் சான்றுகளான கற்கால கருவிகள், வரலாற்றுக் கால கல்வெட்டுகள், கல்வெட்டுகளின் தோற்றம். வளர்ச்சி, ஓலைச்சுவடிகள் ஆய்வு, பயன்பாடு கோவை மாவட்டத்தில் வரலாற்று சின்னங்கள், இவற்றின் பாதுகாப்பு, உலகமரபு தினவிழா, கொண்டாடுதல் போன்றவைகள் பயிற்சி வகுப்புகள் எடுக்கப்படுகின்றது. மற்றும் தொல்லியல் தொடர்பான விளக்கங்களும் அளிக்கப்படுகின்றது.

## கொங்கு நாட்டு கோட்டைகள் விவரப்பலகை

பார்வையாளர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் கொங்கு நாட்டு கோட்டைகள் பட்டியல் விவரப்பலகை அகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

1. பவானிக்கோட்டை
2. டனாயக்கன் கோட்டை
3. தாலமலைக் கோட்டை
4. பழைய கோட்டை
5. ஈரோடு கோட்டை
6. கணியூர் கோட்டை
7. ஊத்துக்குழி கோட்டை
8. ஆனைமலைக் கோட்டை
9. கோயமுத்தூர் கோட்டை

## கோவை மாவட்டத்தில் வரலாற்றுக்கால பெருவழி (Historical National Highways)

கோவை மாவட்டத்தில் வரலாற்றுக்கால பெருவழி, அதாவது "இராசகேசரி பெருவழி"யில் உள்ள பெருவழி கல்வெட்டு பாறையை நிழற்படமெடுத்து பெரிய அளவில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மற்றும் இராசகேசரி பெருவழி கல்வெட்டு உண்மை நகல் இணைக்கப்பட்டுள்ளது.

# ஆலத்தூர் கல்வெட்டுகள்

கல்வெட்டு உள்ள இடம் : கோவை அகழ்வைப்பகம்

அரசன் : முதலாம் வீரசோழன்

செய்தி : ஆலத்தூரில் உள்ள சிதைந்த சமணக் கோயில் வீரசங்காதப் பெரும்பள்ளி என்று வழங்கப்படுகிறது. வீரசங்காதன் என்ற அதிகாரி இப்பள்ளியைக் கட்டி வைத்து அணியாதழகியாரை எழுந்தருளப் பண்ணினான்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ சிந்தரைய மகளார் நம்
2. விராயடியார் வானவன் மாதே
3. வியார் சிற்றாச்சரவடிக்க மணவ (ர)
4. ட்டி . . . நது தவப்பட்டா ஆலத்தூர்
5. க . . . பள்ளி ஆழானின்ற குளத்து வீசங்
6. காதப் பெரும்பள்ளி என்று பெரும் நடக
7. ர நாமத்தில் உள்ளோச ஞ(ண)வுஞ் சேவித்து . . . . . . . .
8. துக்கு வித்தார்

(2)

இடம் : கோவை அகழ்வைப்பகம்

அரசன் : கோனாட்டான் வீரசோழன் (யா.37) கி.பி.979-80

செய்தி : நிலதானம்

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ கோநாட்டானேன் வீ
2. ரசோழப் பெருமானடிகளுக்குத் திரு
3. வெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு முப்
4. பத்தேழாவது ஆனித் திங்கள் முதல் . . . . .
5. ஆலத்தூர் வீரசங்காத வேம் பள்ளியிற் க
6. . . . . இவ்வருகதேவர் எித்த அதேம வயிற்
7. று நிலன் செசுலி நாலெல்லை ஆக கை . . . . ரு
8. மு ழெ நம்முக்கு கோள் புத்தி பத்த
9. வான வழி ஏழச்சம் ஒழியாமல் அறுவ(ன்)

# ருத்திரா பாளையம் கல்வெட்டுகள்

கல்வெட்டு உள்ள இடம் : கோவை அகழ்வைப்பகம்

அரசன் : விக்கிரமசோழன்(கொங்குச்சோழன்)

செய்தி : கரைவழி நாட்டு இராஜராஜ வளநாட்டில் பிரமதேயம் ஸ்ரீ உலகுடைய பிராட்டியச் சதுர்வேதி மங்கலம் என்ற புதிய ஊர் அமைத்து அவ்வூரைப் பாதுகாக்கும் பொறுப்பை இடங்கை தொண்ணூற்றெட்டுச் சமையத்தாரிடம் கொடுத்து, இவ்வூரில் வரும் வரிகளை இவர்களே பெற்றுக் கொள்ளவும் அரசன் ஆணை பிறப்பித்துள்ளான்.

குறிப்பு : இக்கல்வெட்டின் முதல் பக்கத்தின் மேல் பகுதியில் திருவாட்சி, எருமைத் தலைமீது துர்க்கை, யாளி, அன்னம், இருபுஷமும் குத்துவிளக்கு, குதிரை, சாமரம், கொம்பு, ஊதும் கருவி, வளைதடி, அம்பு, கேடயம், மூன்று கலப்பைகள் செக்கு, குதிரை, கட்டில் மேலே புலி, நாகம் முதலியவைகள் உள்ளன.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொபரகெஸரி பன்மரான
2. திருபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரம
3. சொழ தெவற்குத் திருவெழுத்திட்டுச் செ
4. சல்லா நின்ற திருநல்லியாண்டு மூன்றாவ
5. தின் எதிர் கரை வழிநாட்டு இராஜராஜவ
6. ளநாட்டு பிரமதேயம் ஸ்ரீ உலகுடையபிரா
7. ட்டியச் சதுர்வெதிமங்கல மென்று
8. . . . . . யமாள பெரால் இடங்கை குளமாக
9. கட்டார்ரெ உங்கள் இடங்கை குளமாக பின்புறம்

## ருத்திரா பாளையம் (தொடர்ச்சி)

1. க்கைக் கொண்டு இகிரமம் நமக்கு இறுக்
2. குங்கடமையும் உங்களுக்கெ கொற்றுக்கு
3. டுத்தூணாக தந்தோமென்று நாயனார் அருளிச்
4. செய்தருள நாங்களுமிகிராமத்துகு நாயனார்
5. குடுத்தருளின ஸ்ரீ முகப்படி பெருநான்கெல்

6. லைக்குட்பட்ட அருவரை அத்தநந் பேராலே
7. யும் விக்கிரமசொழ தென்னாறுங்குளங்
8. களும் பிடாகைகளும் ஊர்களிலும் அழி
9. மை அந்நியாயம் புகுத்தின நாங்களு
10. ம் ஸவையம் கூட ஆராஞ்சு ஸபையா
11. ர்க்கு மேவத்திநது குடுப்பொமகாவும்
12. இ கிராமத்திலும் பிடாகைகளிலும் கன்
13. று குண்டை கட்டிநார் உண்டாகில்
14. பன்றில் ஒன்றாக குத்தி தூக்குவொம
15. ாகவும் இகிராமத்துக்கு எங்கள் அத்தா . . . .
16. குள்ள பரிசார முண்டாவுதாகவும் குத்தி
17. கிரமத்துக்குள்ளெ புகுந்தாற்க்கு ஏ
18. ழு நாளைக்கு பிசார முண்டாவுதாகவும்
19. இவ்பெருநான் கெல்லைக்குள்ப்பட்ட நில
20. ங்களு தொட்டங்களு அழிவு வாரா
21. மற் பரிசரிதுக் குடுப்பொமாகவும் திருமுகப்படிக்
22. கு மேல்ப்பட்ட புகுந்தன் நாயனார்க்கு விண்ணப்ப
23. ஞ் செய்து தீர்ந்துக் குடுப்போமாகவும் இப்படி இடங்
24. கை தொன்னூற்றெட்டுச் சமையமும் அமைஞ்சு
25. குடுத்தமைக்கு இவை சமைய கரணத்தாந் எழுத்
26. து இகிராமம் இடங்கை தொண்ணூற்றெட்டு ச
27. மையத்தார்ரக்ஷி
28. வாழ்கதந்திரத்தார்

# இலுப்பநத்தம் கல்வெட்டுகள்

கல்வெட்டு உள்ள இடம் : கோவை அகழ்வைப்பகம்

அரசன் : வீரவல்லாளன் யா. கி.பி. 1338


செய்தி : வடபரிசாரநாட்டு இலுப்பை ஊரும், ஊராளிகளும் அழகிய சொக்கனாருக்கு திருமட விளாகத்தையும் அதற்குரிய உரிமைகளையும் வழங்கியுள்ளனர்.

## கல்வெட்டு (முன்பக்கம்)


1. ஸ்வஸ்திஸ்ரீ விரவ
2. ல்லாள தெவர் பிருத்வி
3. ராஜ்யம் பண்ணியரு
4. ளா நின்ற (ஈஸ்)பரசம்வத்சர
5. த்து தைமாததம் பதினொன்றாகந்
6. தெதி வடபரிசானாட்டு இலு
7. ப்பையில் ஊரு மூரார்களொ
8. ம்மாக கூடி நாக்கரும் உடையா
9. ர் அழகிய சொக்கனார்க்கு சிங்
10. க(யத) ண்ணாயக்கர் . . . . திரு
11. மடவிளாகத்து கைக்கொள்ள
12. ச் சுவந்தியாங் குடுத்த பரிசாவ
13. து வருங்குடிக்கு ஒரு வருஷம்
14. மானியம் இரண்டாம் வருஷ
15. த்துக்கு ஒன்றலிரண்டுமே
16. ல் சந்திராதித்த வரைக்கு ந
17. ன்றறைப் பணம் நாலு
18. ம் இந்தன்மத்தை யிர
19. சுஷிமித்துக் கொள்

## (பின்பக்கம்)

1. . . . . . . . . .
2. மாக்கய நா
3. க்கர் எழுத்து இப்படிக்கு
4. சேரமா எழுத்து இப்படி
5. க்கு தேவர் எழுத்து இப்படி
6. காமிண்டர் எழுத்து இப்
7. படிக்கு அடைக்கவங்க
8. ரத்தார் எழுத்து இப்படிக்கு
9. வாணராயன் எழுத்து
10. தன்மத்தைக் குறையெத்
11. தான் தன் தாய்க்குத் தான்
12. மிணாழ் உ




பெண் குழந்தைகள் விளையாட்டுச சின்னங்கள்
[Hip-Hop Sangam age]
(பேரூர் அகழாய்வு)




கல் மணிகள்
(பேரூர் அகழாய்வு)





தக்களி (textiles spindle)
சுடுமண் நூல் நூற்பான்கள்
சங்க காலம்
(பேரூர் அகழாய்வு)




கற்கால கருவிகள்
கோவை அகழ்வைப்பகம்




சப்தமாத்திரிகாஸ்
கோவை அகழ்வைப்பகம்



மூன்றடுக்கு புடைப்பு சிற்பம்
கோவை அகழ்வைப்பகம்




ருத்ரபாளையம் கல்வெட்டு
கோவை அகழ்வைப்பகம்



சுடுமண் பொம்மை
லிங்கம்
கோவை அகழ்வைப்பகம்



நந்தி - கரையூர்
கோவை அகழ்வைப்பகம்




கற்சிற்பங்கள்
கோவை அகழ்வைப்பகம்



அம்மன் செப்புத் திருமேனி
கோவை அகழ்வைப்பகம்




தொல்பழங்கால குகை ஓவியம்
[White Ochere Colour Elephant]
குமிட்டிபதி
கோவை தெற்கு வட்டம்



[Pre-historic paintings]
தொல்பழங்கால குகை ஓவியம்
குமிட்டிபதி கிராமம்
கோவை தெற்கு வட்டம்



கோவை அகழ்வைப்பகம் புதுப்பிக்கப்பட்ட
புதிய கட்டிடத்தில் அகழ்வைப்பகத்தை
ஆணையர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது



கோவை அகழ்வைப்பகத்தை
ஆணையர் அவர்கள் பார்வையிடுகின்றார்



